**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT,**

**PUDUKKOTTAI**

**C.C. No: 22/16**

**Deposition of Witnesses for PW3**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.**கென்னடி** | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **31.05.2023.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காவல் துறையில் பணி ஓய்வு பெற்று ஈரோட்டில் வசித்து வருகிறேன். கடந்த 2015ம் ஆண்டு ராமநாதபுரம் மாவட்டம் Q பிரிவு குற்ற புலனாய்வு துறையில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 16.10.2015ம் தேதி கள்ளத்தனமாக இலங்கைக்கு கஞ்சா எனும் போதை பொருள் கடத்த இருப்பதாக நம்பதகுந்த தகவலின் அடிப்படையில் 19.15 மணிக்கு ராமநாதபுரம் மாவட்டம் NIB-CID ஆய்வாளருடன் தொடர்பு கொண்டு கடத்தல் சம்பந்தமாக தகவல் தெரிவித்து NIB-CID ஆய்வாளர் அவருடைய குழுவும் எனது தலைமையில் எனது குழுவையும் அழைத்து கொண்டு 19.45 மணிக்கு SP பட்டிணம், விஏஓ பாஸ்கரன், அவருடைய உதவியாளர் காளீஸ்வரன், ஆகியோருடன் புறப்பட்டு எஸ்.பி.பட்டிணம் டூ மீமிசலில் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள லேட்.நாகூர் கனி என்பவருக்கு சொந்தமான கெஸ்ட் ஹவுஸ்சில் உள்ள தென்னம்தோப்புக்கு பார்ட்டியுடன் 22.00 மணிக்கு சென்று தகவாளி சொன்ன அடையாளத்தின் அடிப்படையில் அங்கிருந்த அல்லா பிச்சை, த/பெ.முகமது அப்துல் காதர், பள்ளி வாசல் தெரு, ராமேஸ்வரம், 2. கலந்தர்அலி, த/பெ.நாகூர் கனி, நடுத்தெரு, எஸ்.பி.பட்டிணம் ஆகிய இருவர் இருந்தனர். அவர்களிடம் நாங்கள் தங்களை அறிமுகம் செய்துகொண்டு தங்களிடம் போதை பொருள் வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் உங்களை சோதனை செய்ய அருகில் உள்ள நீதித்துறை நடுவர் முன்பாகவோ, அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ சோதனை செய்ய கேட்ட போது, அவர்கள் எங்களை எங்கும் அழைத்து செல்ல வேண்டாம் நீங்களாகவே சோதனை செய்யலாம் என்று சொன்னதன் அடிப்படையில் NIB-CID காவல் ஆய்வாளர், ராமநாதபுரம் 22.30 மணிக்கு சோதனை சம்மத கடிதம் கொடுத்தார். அதில் மேற்படி விஏஓ, தலையாரி மற்றும் நான், எனது எஸ்.ஐ.பெரியசாமி, ஆகியோருடன் சாட்சியாக கையெழுத்து செய்தோம். பின்னர் அவர்களிடம் சோதணை செய்தபோது 3 மூட்டைகளை நுகர்ந்து பார்த்தபோது

கஞ்சா எனும் வாசனை வந்ததால் அந்த 3 மூட்டைகளும் P1,P2,P3 என தனித்தனியாக குறியீடு செய்தார். முதல் மூட்டையில் 45 கிலோவும், 2வது மூட்டைகளில் 45கிலோவும், 3வது மூட்டையில் 44 கிலோவும் மொத்தம் 134 கிலோவும் கஞ்சா இருந்தது. இதை நாங்கள் எடுத்து சென்ற திராசு மூலம் எடை போட்டு பார்த்தோம். மேற்படி மூட்டைகளில் பகுப்பாய்விற்காக தனித்தனியாக P1,P2,P3 என தனித்தனியாக 50 கிராம் எடுத்து, அதை காக்கி கவரில் எடுத்து கு.எண். மற்றும் வழக்கு விவரம் எழுதி, நூலால் கட்டி, அரக்கால் NIB-CID சீல் வைத்தார். 3 மூட்டைகளில் தனித்தனியாக வாய் பகுதி கயிறால் கட்டி அதிலும் அரக்கால் NIB-CID சீல் வைத்தார்கள். பின்னர் எதிரிகள் ஆஜர் செய்த 1வது எதிரி அல்லா பிச்சை என்பவர் 2 செல்போன்கள் தலா 2 சிம்கார்டுகள், 2வது எதிரியிடமிருந்து 2 செல்போன்கள் தலா 2 சிம்கார்டுகளை, இந்திய பணம் ரூ.6300/- ஆகியவை அத்தாட்சியில் 23.30 மணிக்கு கைப்பற்றினார். இந்த மகஜரில் மேற்படி விஏஓ, தலையாரி, நான் மற்றும் உதவியாளர் பெரியசாமி ஆகியோர் கையெழுத்து செய்தோம். பின்னர் எதிரிகள் இருவரும் தானாக முன்வந்து NIB-CID ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்கள். ஒப்புதல் வாக்குமூலத்தில் NIB-CID சிறப்பு சார்பு ஆய்வாளரும், தலைமை காவலரும் சாட்சியாக கையெழுத்து செய்தனர். பின்னர் 3 மணிக்கு NIB-CID ஆய்வாளர் பார்வை மகஜர், மாதிரி வரைப்படம் தயார் செய்தார். பிறகு எதிரி மற்றும் கைப்பற்றிய பொருட்களுடன் சம்பவ இடத்திலிருந்து புறப்பட்டு 17.10.2015ம் ஆண்டு காலை 5 மணிக்கு NIB-CID அலுவலகம் சென்றோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார். நடந்த விவரத்தை சொன்னேன். என்னிடம் காட்டப்படும் சோதனை சம்மத கடிதம், கைப்பற்றுதல் மகஜர், அதில் உள்ள 3வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். சோதனை சம்மத கடிதம் **அ.த.சா,ஆ.2** ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா,ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

எதிரிகள் வழக்கறிஞருக்கு உடல் நிலை சரியில்லை என்றும் எனவே சாட்சியை தற்போது குறுக்கு விசாரணை செய்ய இயலாது என்று எதிரிகள் தரப்பில் தெரிவித்தன்பேரில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.